09.09.2025 **MCOP.No. 108 /2020**

**ம.சா. 2 பெயர்: சின்னராஜ் த/பெ. கோபால்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சரோஜா அம்மா அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சரோஜா அம்மாளை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அவர் கடை வைத்த நாட்கள் முதலே தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். விபத்து சமயத்தில் நானும் கடை வைத்திருந்தேன். எனது கடை எங்கிருந்தது என்றால் பேருந்து நிலையத்திற்கு பின்னாடி பேருராட்சி சாலையில் வைத்திருந்தேன். விபத்து நடந்தது திருப்பத்தூர் இருந்து ஊத்தங்கரை என்றால் சரிதான். விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் தேதி தெரியவில்லை ஆனால் சுமார் 6 1/2 வருடத்திற்கு மேல் இருக்கும் விபத்து நடந்த நேரம் மாலை 5.30 மணி இருக்கும். விபத்து சமயத்தில் நான் பூ கடையில் பூ வாங்குவதற்கு வந்து இருந்தேன். அவர் அடிபட்டு இருந்தார் நான் பார்த்தேன் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் பூ கடை வைத்து மாதம் 15 ஆயீரம் சம்பாதிப்பதாக கூறுவது வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து மனுதாரர் பூ வாங்கி கொண்டு ரோட்டை கடக்கும் போது நடந்தது என்றால் ரோட்டை கடந்த போது வண்டி மோதிவிட்டது. மனுதாரர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.